387

Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் சழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபேறநில்.

வெண்டாமரை உ.	1914-ம் ஆு ஏப்ரல் மீ	இதழ் ச.

பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்,

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.

வருஷ சந்தா	ரூ 1	வெளிநாட்டுக்கு	ரூ 2
தபாற்கூலி	அணு 4	தனி சஞ்சிகை	அணு 2

Saigon Sinnaya Press, Pondicherry.

உள்ளுறை.

பக்கம்.

ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் சரிதம் :— ஸ்ரீமான் தி. வடிவேலுமுதலியார், திருவெண்ணெய்நல்லூர். ... 74

ரமணி (ஓர் காதற் கதை): — ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப்பிள்ளை, புதுவை. 77

பாலசிக்ஷை:— ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I. புதுவை. 82

ஷாஜிகானும் தாஜ் மஹாலும்:— ஸ்ரீமான் ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர், புதுவை. 84

நூல் நயந்தெரித்தல் :— ஸ்ரீமான் ஜி. சுவாமிநாதன் ஆசாரியார், தமிழ்வித்வான், கோட்டாறு. 87

மங்கலம் :— வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர-சுப்பைய சுவாமிகள். 90

பெருமையுஞ் சிறுமையுந் தான்றர வருமே: — ஸ்ரீமான் M. V. சுப்ரமண்ய ஐயர். 91

சுஜன சம்வாதம் :— ஸ்ரீமான் ஆ. செங்கல்வராயமுதலியார், காஞ்சீபுரம். 94

வைத்தியக் குறிப்பு: — V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், Ex. முனிசிபல் கௌன்சிலர், பழனி ஸ்தலம். 96

பத்திரிகை வரவு. 96

சமாசாரம். 97

இலக்ஷணாவலி. 13

குறிப்பு. — இப் பத்திரிகைக்குரிய விஷயங்களைப் பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்கக்கூடாது.

390

Swami Vivekananda.

அமெரிக்கா கண்டத்திய சிகாகோ ஸர்வமத மகாசபையில் ஹிந்து மதப்பிரதிநிதியாக விஜயம் செய்து வேதாந்த மதவெற் யை முழங்கச்செய்த அவதார மூர்த்தியாகிய ஸ்ரீ விவேகாநந்த வாமிகள்.

புஸ்தகரூபமாகக் கிடைக்கும் இம்மஹானுடைய உபதேசங் ளையும் உபந்நியாசங்களையும் பெற்று வாசித்து அனுஷ்டித்து தால் ஆத்மஞானச் செல்வர்களாய் மனச்சாந்தி அடைந்து ம்மை மறுமை சுகபோகங்களை உள்ளபடி அனுபவிக்கலாம்.

S. Narayana Reddy, Vellore.

Victoria Press, Vellore.

391

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடு பேறுநில்.

வெண்டாமரை உ.] 1914-ம் ஆ எப்ரல் மீ [இதழ் ச.

இலௌகிகப் பகுதி.

ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் சரிதம்.

பிரசங்க வன்மையால் உலகிலுள்ள சர்வ மதங்களிலும் ஹிந்து மதமேமேற்பட்டதென ஸ்தாபித்து ஜயக்கொடி நாட்டிய சுவாமி விவேகாநந்தாது சரிதம் உலகப் பிரசித்தமாயினும், அமுதமும் அன்பர் சரிதமும் பன்முறைகொள்ளினும் பயன்தருமாகையின் அறிந்தவரை சுருக்கமாகக் கூறுவாம். ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் கல்கத்தா நகரிலே காயஸ்த (கணக்கர்) குலத்தில் உற்பவித்து, வக்கீல் உத்தியோகத்தைத் தொழின் முறையாக உடைய விசுவநாத தத்த என்பவருக்கு, 1863-ம் வருஷத்தில் சுப முகூர்த்தத்தில் திருவவதாரம் செய்தனர். பெற்றோர் இவருக்கு "நரேந்திரநாத தத்த" எனத் திருநாமம் சூட்டி, குழந்தையினிட ம[illegible]மந் துள்ள கம்பீரத் தோற்றத்தையும் வீர லக்ஷணக் குறியையுங் கண்டு "வீரேசுவரன்" எனும் செல்வப் பெயரால் அழைத்துவந்தனர். வயது வந்தபின், கல்கத்தா நகரிலுள்ள கிறிஸ்தவ கலாசாலையில் பயின்று 1884-ம் வருஷத்திலே B. A. பட்டம் பெற்றார். இவர் இளமையிலேயே நெஞ்சிளக்கமுள்ளவராகையால் பாடசாலையில் தம்முடன் கல்விகற்கும்

392

மாணவர்கள் (Bible) விவிலியநூல் கற்றுக்கொடுக்கவந்த ஐரோப்பியரைக் குதர்க்கமான கேள்விகள் கேட்டுக் கைகொட்டிச் சிரிக்குங்கால், உபாத்தியாயருக்கு அவமானம் நேராவண்ணம் தமது சகபாடிகட்குத் தக்க விடையளித்து வாயை அடக்குவார். பாடசாலை விட்டு நின்றபின் வக்கீல் உத்தியோகத்திற்குப் பழகிச் சொற்பகாலம் கையாண்டுவந்தாரெனினும் மத விசாரணைபுரிதலும் உண்மைநிலையை அறியவேண்டுமெனும் ஆவலுமே அவரை எத்தொழிலும் செய்யக்கூடாதபடி செய்துவிட்டது. சங்கீதத்திலும் சித்திரம் எழுதுதலிலும் மிக்க பிரியமுடையவராய்ப் பிரம சமாஜத்தில் சேர்ந்து ஹார்மோனியம் வாசித்து வருவார். ஆங்கிலங் கற்று, பிரகிருதி சாஸ்திரம் (Science) முதலிய இலௌகிக நூல்களைப் படிக்க ஆரம்பித்தது முதல் சர்வ மத சித்தாந்தங்களையும் சந்தேகித்து, அவற்றைத் துச்சமாகக்கருதும் வழக்கம் மனதிற் புகுந்தது. தக்க ஆசிரியரைக்கொண்டு அதை நிவர்த்திக்க முயற்சித்து வந்தனர். பின்னர், தமது அம்மானான ராமசந்திர தத்த அவர்களால் தக்ஷிணேசுவரத்தில் "ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர்" என்ற பெரியா ரிருப்பதாகவும் அவர் உண்மையான ஞானியென்றும் அவரால் தமது சந்தேகங்கள் நிவர்த்திக்கப்படுமென்றும் அறிந்து அங்குச் சென்றார். பரமஹம்சரும் இவர் மனோநிலையைக் கண்டு தமக்குச் சிஷ்யனாக்கிக்கொண்டார். முதல்முதல் பரம ஹம்சர் விவேகானந்தரை அருகில் வரவழைத்து மார்பின்மீது தமது திருக்கரத்தை வைத்ததும், ஒரு முகூர்த்தகாலம் அவர் கண்களுக்கு எல்லாம் அகண்ட சொரூபமாய் விளங்கியதாம். இதுதான் சமாதி நிலை. இதைப் பரம ஹம்சர் ஸ்பரிசமாத்திரத்தாலே அனுக்கிரகித்தார். பின்னர் அங்குள்ளவர்கட்கு இவரைச் சுட்டிக்காட்டி "இவன் இவ்வுலகத்தை ஓர் ஆட்டு ஆட்டிவைக்கப்போகிறான்" என்றாராம்.

ருஷி வாக்கியம் நிறைவேறிய விடயம் உலகப் பிரசித்தம். தக்க ஆசிரியர் இவரேயென உணர்ந்த ஒரு வருடத்திற்குப் பின் துறவறம் மேற்கொண்டனர். பரமஹம்சருக்கு இவருடனிருந்த சிஷ்யர்கள் இருபதின்மரிலும் இவரே முதல்வராயிருந்தார். 1886-ம் வருடத்தில் பரம ஹம்சர் சமாதிநிலை யடைய, அதற்குப் பின் தேச சஞ்சாரஞ் செய்ய வேண்டி இமாசலம் சென்று பலநாள் யோக சமாதியிலிருந்து மீட்டும் கல்கத்தா வந்து ஓர் மடம் கட்டி அதிலுள்ள ஏனைய சிஷ்யர்கட்குத் தலைவராயிருந்து சிலநாட் கழித்துப் பின்னரும் தேச சஞ்சாரஞ் செய்யத் தொடங்கி, 1892-ம் வருஷத்தில் திருவாங்கூர் வந்து அவண் வந்திருந்த சென்னை வாசி ஒருவரின் வேண்டுகோட் கிணங்கிச் சென்னை வந்து சேர்ந்தார். இந்த மதத்தை மூடபக்திக் களஞ்சியமென நம்பியிருந்த பலர்

393

இவரது அரிய உபதேசத்தால் அதைவிட உயர்ந்த மதம் வேறில்லையென உணர்ந்து இவர்பால் அன்புபாராட்டுவோராயினர். அக்காலத்து, 'சிகாகோ' நகரில் சர்வ மத சபை ஒன்று நடைபெறப்போவதாகவும், அங்கு அறிவாளிகள் தங்கள் தங்கள் மதத்தின் உண்மைக் கருத்துகளை வெளியிடலாமெனவும் பிரசுரஞ் செய்திருப்பதை யுணர்ந்து, பல பிரமுகர்கள் நமது சுவாமிகளை அங்குச் சென்று இந்து மத விஷயமாகப் பிரசங்கம்புரிந்து வரவேண்டுமென வேண்டிக்கொண்டனர். அதற்கிணங்கிச் சுவாமிகளும் சிகாகோ நகரம் சென்று, சர்வ மத சபையில் தமது அமுதம்போன்ற மொழிகளால் உலகத்தில் இந்து மதத்தைவிட வேறு உயர்ந்த மதமில்லையெனப் பிரசங்க மாரிபொழிந்து ஜெயக்கொடி நாட்டினர். ஷை பிரசங்கத்தைக் கேட்ட பல ஐரோப்பியர்கள் இந்து மார்க்கத்தை அனுசரிக்கத் தொடங்கினார்களெனின், சுவாமிகளின் வாக்கு வல்லமையை எவரே துணிந்து கூறவல்லார். அது முதல் பல தேசங்களில் பிரசங்கம் செய்துகொண்டு நியூயார்க் நகரத்தில் வேதாந்த சபை ஒன்று ஸ்தாபனம் செய்தனர். பின் சுவாமிகளின் புகழைக் கேட்டு இந்தியாவிலுள்ள பலர் பல சபைகள் கூடி வந்தனோபசார பத்திரம் அனுப்பினர். அவைகட்குத் தக்கவாறு விடையளித்து லண்டன் சென்று அங்கு ஸ்டர்டி துரையவர்களால் உபசரிக்கப்பட்டு, சில்பகல் வைகிப் பின்னர் இந்தியாவிலிருந்து சாரதாநந்த சுவாமிகளை வரவழைத்துக்கொண்டு அமெரிக்கா சென்று பிரசங்க மாரிபொழிந்து, மற்றும் பல தேசங்களிலும் அருமையாகப் பிரசங்கம் செய்துகொண்டு யாத்திரை செய்தனர். மீண்டும் இந்தியா வந்து சென்னை முதலான விடங்களில் சுவாமிகளை எதிர்பார்த்திருந்த அன்பர்கட்குத் தரிசனமளித்து இனிமை வசனங்களால் அவர்களை மகிழ்வித்து மறுபடியும் கல்கத்தா மூலமாக இங்கிலாந்து சென்று அங்குள்ள பிரதேசங்களில் பலகாலம் வசித்து இறுதியாக 1900-ம் ஆு இந்தியா திரும்பிவந்தார். அதிக உழைப்பால் சுவாமிகட்குத் தேகாரோக்கியம் தவறிப்போயிற்று அப்படியிருந்தும் 1901-ம் ஆு மார்ச்சு மீ 19-ம் வ அங்கு இரண்டு பிரசங்கங்கள் செய்துவிட்டு, சந்திரநாத், காமாக்யம் என்ற க்ஷேத்திரங்கட்கு யாத்திரையாகப் புறப்பட்டு அங்கிருந்து ஷில்லாங்குக்குப் போய் அப்பொழுது ஆஸாம் சீப் கமீஷனராயிருந்த ஸர்ஹென்றி காட்டனால் உபசரிக்கப்பெற்று அங்கு ஐரோப்பியர் நிறைந்த சபையில் உபந்நியாசம் செய்துவிட்டுச் சில தினங்கள் தங்கியிருந்து பிறகு கல்கத்தா வந்து, அவரது தேக ஸ்திதி குணமாகுமென நம்பியிருக்கையில், திடீரென 1902-ம் ஆு ஜூலை மீ 4-ம் வ பேலூர் மடத்தில் மஹா சமாதியில் கலந்துவிட்டார். அப்போது சுவாமிகட்கு வயது 39. இத்தகைய

மகாத்மாவை இப்பூவுலகு விரைவில் இழக்க நேர்ந்தது மிகவும் பரிதபிக்கத்தக்கதே. சுவாமிகளின் அரிய உபதேசங்களைச் சமயம் நேர்ந்துழிக் கலைமகள் எற்று வெளிவருவள். சுபம்.

தி. வடிவேலுமுதலியார்,
திருவெண்ணெய்நல்லூர்.

ரமணி.

ஓர் காதற் கதை.

அத்தியாயம் 5.

(தொடர்ச்சி.)

"ஜனார்த்தன! ஜனார்த்தன! ஜனார்த்தன! எழுந்திரு" என்று ஓர் அன்னையின் அன்புநிறைந்த மிக உருக்கமான மெல்லிய குரலிற் கூறினர் முன்பு மகா தீரத்தொனியில் கர்ஜித்த சந்யாசி. ஜனார்த்தனனோ ஒன்றும் பேசவில்லை. பிரஜ்ஞையற்றிருந்தான்.

"அடி கொலைப்பாதகி! ஏனடி இப்படி நிற்கிறாய்! ஜலங் கொண்டு வாடி, நீயும் ஒரு ஸ்திரீதானா!" எனப் பாதகியின் உள்ளமும் கனியுமாறு சந்யாசி மீண்டும் மொழிந்த சிறிது நேரத்திற்குள், பாதகி நடுங்கிக்கொண்டிருக்கும் தன் வலக்கையில் ஜலம் நிறைந்த ஒரு டம்ளருடன் நின்றாள். சந்யாசி அந்த டம்ளரை வாங்கி ஜலத்தை ஜனார்த்தனன் முகத்திற் றெளித்தார். அவன் மெல்லக் கண்விழித்துப் பார்த்தான். சுவாமி தன் இரு கரங்களாலும் அவன் முதுகைத் தாங்கி மெல்லத் தூக்கி அவனை உட்காரச்செய்து, புன்னகையுடன், "உன் புருஷத்தன்மையை இப்பொழுது தான் அறிந்தேன்" என்றார்.

"இல்லை சுவாமி! என் ரமணி இங்கே இருப்பாளென்ற முழு நம்பிக்கையோடல்லவா நான் இங்கே வந்தேன். அப்படி ஆவலோடு வந்தவன் அந்தக் கடிதத்தைப்பார்த்து நான் ஆவலுடன் வந்தது வியர்த்தமென்றறிந்தால் நான் அதை எப்படிச் சகிப்பேன். ரமணி எங்கேதான் இருக்கிறாள்! அவளை இனி எங்கே தேடுவேன்!" என்று பெருமூச்செறிந்தான். சந்யாசி அருகே கிடந்த கடிதத்தை எடுத்துத் தனக்குள் பின்வருமாறு வாசிக்கலாயினர்.

"ஹே! பிசாசமே! என்னை இனி நீ தேடுவதில் பயனில்லை. என் இஷ்ட தேவதையின் கடாட்சத்தினால் மாயமாக இந்தச் சிறையினின்றும்

தப்பித்துக்கொண்டு போகின்றேன். உன் வஞ்சக வலைக்குள் அகப்பட்டும் என் மானத்திற்கும் என் கற்பிற்கும் யாதொரு கெடுதலுமின்றி அந்த வலையினின்று என்னை மாயமாய் விடுவித்த என் அம்மணியின் சக்தியே சக்தி. இன்றிரவு நீ இந்த அறையைத் திறப்பதற்குள் நான் உன் பழிச் செயலைப்பற்றி என் தாயாருக்கும் அத்தானுக்கும் விஸ்தரித்துக்கொண் டிருப்பேன்.''

21 – 4 – 1899. ரமணி.''

"நீ மூர்ச்சையாகும்படியான விஷயம் இந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறது'' என வினவினர் ஸ்வாமி.

"நேற்று இவ்விடமிருந்து தப்பித்துச்சென்ற ரமணி இன்றிரவு வரையில் வீடுவந்து சேரவில்லையென்றால் மறுபடியும் அவளுக்கு என் னென்ன விபத்துக்கள் சம்பவித்தனவோ, அவள் இப்பொழுது எங்கே இருக்கிறாளோ என்ற விஷயங்களைப்பற்றி எண்ண எண்ண இன்னும் என் சித்தம் கலங்கி மயக்கமடைகிறது.''

"ஜனார்த்தனா! அஞ்சாதே. நான் உன்னைக் கண்ட க்ஷணத்தி லேயே எனக்கு உன்னிடத்தில் ஓர் விசேஷ அன்பு ஜனித்தது. நீயும் என்னிடம் பக்திவைத்து என்னை நம்பினையானால் நான் உன் இதத்தையே நாடி உன் சஞ்சலமனைத்தையும் ஒழிப்பேன்'' என்றனர் சந்யாசி.

"எனக்கும் உங்களைப் பார்த்தமாத்திரத்திலேயே உங்களிடத் தில் பிரமையும் பக்தியும் ஏற்பட்டன. உங்களை நம்புகிறேன். ஆனால் ஸ்வாமி! இனி என் ரமணியை எங்கேபோய்த் தேடுவது! அவள் என்ன கஸ்திப்படுகிறாளோ! எனக்கு ஒன்றுந் தோன்றவில்லையே என்ன செய் வேன்'' எனத் தன் நெற்றியைத் தன் வலக்கரத்தினால் தாங்கினான் ஜனார்த்தனன்.

"என்ன! நீ சிறந்த கல்விமானா யிருந்தும் இப்படிக் குழந்தை யைப்போல் வருந்துகிறாயே, முதலில் உன் துக்கத்தைச் சாந்தப்படுத்திக் கொள். பின்பு அமர்ந்தாலோசிப்போம்'' என்றனர் சந்யாசி.

இருவரும் அரைநிமிஷநேரம் மௌனமா யிருந்தனர். பின்பு ஸ்வாமி அறையின் வாசலருகே சென்று கதவைச் சார்த்தித் தாளிட்டு விட்டு மீண்டும் கட்டிலினருகே வந்து அருகே யிருந்த ஸ்திரீயை நோக்கி "ஓ! நீ அப்பாலேபோய் நில்'' என்றனர். அவளும் ஒரு மூலையோர மாய் ஒதுங்கிப்போய் நின்றாள். சந்யாசி கட்டிலின்மீ துட்கார்ந்தார்.

"ஜனார்த்தனா! இந்த ரமணி யார்? உன் மனைவியா, அல்லது தங்கையா? அவள் எப்படி இந்த அறையில் சிறைப்பட்டாள்? எல்லா விஷயங்களையும் எனக்கு விவரமாய்ச் சொல்" என்றார்.

"விவரங்கள் அதிகமில்லை சுவாமி! சென்ற திங்கட்கிழமை இரவு அவள் வீட்டிலிருந்து மாயமாய்க் காணாமற்போய்விட்டாள். அவள் காணாமற்போன மாயத்தைக் கண்டுபிடிப்பதற்கு எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தேன். ஒன்றும் பயன்பெறவில்லை. இன்றிரவு நீங்கள் இரண்டு கடிதங்கள் கொணர்ந்தீர்கள். அக் கடிதங்களினால் ரமணி இங்கே யிருக்கிறாளென்றெண்ணி இங்கே வந்தேன். இங்கேயும் அவளைக்காணோமே, இனி என்ன செய்வது!"

"அதோ நிற்கிற ராக்ஷஸியா ரமணியைத் திருடிக்கொண்டு வந்து விட்டாள்?" "ஆமாம், அவளாகத்தானிருக்கவேண்டும்" என்றனன் ஜனார்த்தனன்.

"ஹேய்! இப்படி வந்துநில்" என மூலையில் நின்ற ராக்ஷசிக்குக் கம்பீரமாய்க் கட்டளையிட்டார் சந்யாசி. அவளும் அங்கமெலாம் நடுங்கியவாறே வந்து சுவாமியின் முன்பு நின்றாள்.

"உன் பெயரென்ன?" என்றனர் சந்யாசி.

"முத்தம்மாள்."

"நீயா ரமணியைத் திருடினாய்?"

"நான் இல்லை" என மெல்லச் சொன்னாள் முத்தம்மாள்.

சுவாமிக்குக் கோபம் மூண்டுவிட்டது. அவசரமாய் யானைமுகப் பிடித் தடியைக் கையிலெடுத்தார்.

"நான்தான், நான்தான், நான்தான்" என உளறினாள் ஸ்திரீ.

சந்யாசி தடியைத் தன் மூக்குக்கு நேராகப் பிடித்துக்கொண்டு முத்தம்மாள் முகத்தை உற்று நோக்கி, சிங்கத்தொனியில் உபதேசிக்கலாயினர்.

"ஹே! சூர்ப்பனகே! நீ எல்லோரையும் ஏமாற்றுவதுபோல் என்னை ஏமாற்ற முடியாது. நான் உன்னையும் உன்னைப்போன்றவர்களையும் அடக்குவதற்காகவே உதித்த சாமியார் என்று எண்ணிக்கொள். நீ எதை மறைத்தாலும் எல்லாவற்றையும் என் ஞானதிருஷ்டியால் அறிந்துகொள்வேன். ஜாக்கிரதை! நாங்கள் கேட்பதற்கெல்லாம் ஒரு விஷயத்தையும் ஒளியாமல் சரியான பதில் சொல். ஒரு அக்ஷரம் பொய் பேசினாயானால்

397

இந்த மந்திரத் தடி உன் மண்டையை ஒன்பது ஓடுகளாக உடைத்து விடுவது நிச்சயம். ”

இவ்வாறு கர்ஜித்துவிட்டு அந்தத் தடியால் ஒருபாவமு மறியாத கட்டிற் சுவரை ஒரு அடி அடித்தார்.

பின்பு சுவாமியும் ஜனார்த்தனனுமாக அந்த ஸ்திரீயை அநேக கேள்விகள் கேட்டார்கள். அவற்றிற்கெல்லாம் தானறிந்தவரையில் உண்மையாக உத்தாமுரைத்தாள் முத்தம்மாள். அவ்வுத்தரங்களின் சாராம்சமாவது : —

“ திங்கட்கிழமை இரவு சுமார் பத்தரை மணிக்கு ரமணி சாவித்திரி வீட்டு ஜன்னலருகே வந்தபொழுது கண்ணையன் கட்டளையால் நான் அவளைத் தூக்கி ஒரு ஜட்கா வண்டியில் போட்டு இந்த பங்களாவுக்குக் கொண்டுவந்தேன். அவளுக்கு எல்லாச் சௌகரியங்களும் ஏற்படுத்தியிருந்தேன். காலையிலும் மாலையிலும் தோட்டத்திற்கு உலாவுவதற்கும் அவளை அழைத்துப்போனேன். காகிதமும் பென்சலும் கேட்டாள். அவைகளையுங் கொடுத்தேன். நேற்றுக் காலையில் நான் இந்த அறைக்குள் வந்தபொழுது அவள் கட்டிலிற் படுத்துக்கொண்டே தனக்குத் தேக அசௌக்கியமென்றும், தன்னால் தோட்டத்திற்கு வர முடியாதென்றும் சொன்னாள். பின்பு கட்டிலின் மீதே பல்துலக்கி முகங் கழுவினாள். கட்டிலிலேயே காலைப்போஜனம் சாப்பிட்டபின்பு, தனக்குப் போர்த்துக்கொள்ள ஒரு சால்வை வேண்டுமென்று கேட்டாள். கொடுத்தேன். மத்தியானச் சாப்பாடும் கட்டிலிலேயே சாப்பிட்டுப் படுத்துக்கொண்டாள். சாயங்காலம் சுமார் 6 மணிக்கு விளக்கேற்றுவதற்காக அறையைத் திறந்தேன். அப்பொழுது சால்வையால் தன்னை முழுவதும் மறைத்துப் போர்த்துக்கொண்டு அயர்ந்த நித்திரையி லிருந்தாள். இராத்திரி சுமார் 8 மணிக்கு இராச் சாப்பாட்டோடு கதவைத் திறந்து உள்ளேவந்து ஜன்னலில் சாப்பாட்டை வைத்துவிட்டு அவளை எழுப்புவதற்காகச் சால்வையை எடுத்தேன். ஆனால் சால்வையை எடுத்ததும் ரமணியைக் காணவில்லை. தலையணை யொன்றுதானிருந்தது. அதன்மேல் இந்தக் கடிதமிருந்தது. கடிதத்தை வாசித்து நான் பிரமித்து விட்டேன். நான் அறையை விட்டுப் போனபொழுதெல்லாம் கதவை நன்றாய்ப் பூட்டிவிட்டுத்தான் போனேன். ஜன்னல் வழியாய்க் குதித்தோடிப்போயிருப்பாளென்று ஜன்னலைப்பார்த்தேன். ஜன்னல் கம்பிகளெல்லாம் முன்போலவே யிருந்தன. நான் கதவைத் திறக்கும்பொழுதெல்லாம் பூட்டு ஒழுங்காகவே யிருந்தது. ஜன்னல் வழியாய் ஒரு கடிதத்தைப்போட்டால் அது பங்களாவைச் சேர்ந்த

ஒரு தாழ்வாரத்தில்தான் விழும். பங்களாவின் வாசற் கதவுகளையெல்லாம் நான் எப்பொழுதும் அடைத்தேவைத்திருந்தேன். என்னையும் ரமணியையுந் தவிர, பங்களாவுக்குள் வேறொருவரும் வரவில்லையென்று நிச்சயமாய்ச் சொல்வேன். அவள் இந்த அறையிலிருந்து தப்பியது மாயமாகத்தானிருக்கிறது. ஒரு தேவதைதான் அவளை மாயமாய்த் தூக்கிக்கொண்டுபோ யிருக்கவேண்டும். அவள் இவ்விடமிருந்து காணமற் போன விஷயத்தைக் கண்ணையனுக்கு எப்படிச் சொல்வது அவர் என்னை எப்படி நம்புவார் என்றெண்ணி யெண்ணிப் பயந்துகொண்டு இன்னும் நான் அவருக்கு இந்த விஷயத்தைத் தெரிவிக்கவில்லை.''

முத்தம்மாள் சொன்னவைகள் உண்மைதானவென்று அறிந்து கொள்ளுமாறு, ஜனார்த்தனன் அவளை அநேக மாறுகேள்விகள் கேட்பதில் தன் வக்கீல் வல்லமை முழுமையும் உபயோகித்தான். சுவாமியும் அசற்காகத் தன் யானை முகப்பிடித் தடியை ஒங்கும் சாமர்த்திய முழுவதையும் உபயோகித்தார். கடைசியாய் இருவரும் முத்தம்மாள் கூறியவை யனைத்தும் அரிச்சந்திரன் வாக்கன்ன சத்திய வாக்கென்னத் தீர்மானித்தார்கள்.

இவ்வாறு தீர்மானித்த பின்பு சந்யாசி "ஜனார்த்தன! ரமணி இரவு பத்தரை மணிக்கு யாரோ சாவித்திரி வீட்டுக்குப் போனளென்று இந்த கீலி சொன்னளே. அந்த அகாலவேளையில் அவள் என் அப்படிப் போனள்? நீ ஏதேனும் ஒரு காரியார்த்தமாக அனுப்பினயா'' என்றனர்.

"நான் அனுப்பவில்லை'' என்றான் ஜனார்த்தனன்.

"பின்பு என் போனள்?''

ஜனார்த்தனன் ஒன்றும் பேசவில்லை.

"என் போனளென்று உனக்கே தெரியாதோ?''

மௌனமாகவே யிருந்தான் ஜனார்த்தனன்.

"சரிதான், இதற்குப் பதில் சொல்வதற்கு உனக்கு இஷ்டமில்லை போலும். நீ என்னை முற்றும் நம்பி ரமணி காணமற்போனமை சம்பந்தமான சகல ரகஸ்யங்களையும் எனக்குத் தெரிவித்தாலொழிய என்னல் உனக்கு ஒரு உதவியும் செய்யமுடியாது. உன் ரகஸ்யங்களை நீயே வைத்துக்கொள். நான் போகிறேன்'' எனக் கழறிக் கட்டிலிலிருந்து எழுந்து கதவுவரையிற் சென்றுவிட்டார் நமது சுவாமி.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

7-வது அத்தியாயம்.

ரு-வது வயது.

(தொடர்ச்சி.)

சன்மார்க்கப் பயிற்சி.

இவ் வயதுக் குழந்தைகளைச் சன்மார்க்கத்திற் பயிற்றுவதற்குக் கற்பிக்கவேண்டிய நீதிகளில் பரோபகாரமும் ஜீவகாருண்யமும் வாய்மையும் முக்கியமானவைகளென்று கூறியுள்ளதைச் சற்று விளக்கிக் காட்டுவோம்.

பரோபகாரம்.

பிறர்நல விருப்பமே தர்மத்திற்கெல்லாம் மூலகாரணமாயுள்ளது. எவனொருவன் தன்னை நேசிப்பதுபோலப் பிறரையும் நேசித்து ஒழுகுகின்றனோ அவனைப் பழிபாவங்கள் சூழா. அது எவ்வாறெனின், கொலை, களவு, பொய், பொறாமை முதலிய எப் பாதகத்திற்குக் காரணம் தேடினும் அவையெல்லாம் பிறர் நலத்தை யழித்துச் சுயநலத்தை நிலைநாட்டுவதற்காகவே உற்பத்தியாகின்றனவென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்.

ஆகவே, சன்மார்க்கத்தில் குழந்தைகளைப் பயிற்றுவதற்கு அவர்களிடத்தில் சிற்றிளம்பிராயத்தினின்றே பரோபகார சிந்தையை விருத்தி செய்து வரவேண்டியது ஆவசிகமாகின்றது.

குழந்தைகள், மிருகங்கள் முதலிய அறிவு குறைந்த பிராணிகளெல்லாம் இயல்பாகச் சுயநலமே கோருகின்றவைகள். இதற்குத் திருஷ்டாந்தமாக ஓர் நாயினெதிரில் ஓர் உணவுப்பொருளை யெறிந்தால் தான் ஈன்ற குட்டியே தன்னருகிலிருப்பினும் அதைக் கடித்துத் துரத்திவிட்டுத் தான் மாத்திரமே அவ்வுணவைத் தின்னத்தேடும்.

தன்னலத்தைக் குறைத்தேனும் இழந்தேனும் பிறர் நலத்தைத் தேடும் பரோபகார சிந்தை மனிதர்களுக்கு அறிவின் முதிர்ச்சியினாலேயே யேற்படுகின்றது. அறிவு இன்னும் முதிராத மூன்று வயதுக் குழந்தைகளிடத்தில் இச் சிந்தை இயற்பாக இருப்பது துர்லபம். இதனை உபதேச முறையாகப் புகட்ட முயல்வதும் அசாத்தியம். பழக்கத்தினாலும் நற்சேர்க்கையினாலுமே பரோபகார சிந்தை யேற்படுமாறும் விருத்தியாகிக் கொண்டுவருமாறும் செய்யவேண்டும்.

2.

தன் சிறு தோழர்களில் எவரேனும் எவ்வாறேனும் கஷ்டப்படுவதைக் கண்டால் தானும் அக்கஷ்டத்திற்கு அநுதாபப்படும்படி குழந்தையைப் பழக்கிவரவேண்டும். பிறர் துன்பத்தைத் தான் இதயபூர்வகமாய் உணர்கின்ற ஒருவன் பிறர்க்கு ஒருபோதும் தீங்கிழைக்கமாட்டான். இதரர் துன்பத்திற்குப் பரிதாபப்படாத வன்கண்ணன் மாத்திரமே இதரர் மனத்தை நோவச்செய்யும் செயல்களைச் செய்வான்.

குழந்தைகள் பொம்மை, மரப்பதுமை முதலியவைகளுடன் விளையாடும்போது அவைகள் சுரம், தலைவலி முதலிய நோய்களினால் வருந்துவனபோலவும், தாம் அக்கஷ்டங்களுக்கு அநுதாபப்படுவதுபோலவும், சிகிச்சை செய்வதுபோலவும் நடிப்பதுண்டு. இரக்கம், பிறர் நேசம் முதலிய நல்லுணர்ச்சிகளைக் குழந்தைகளின் இளமனதில் வளரச்செய்வதினால் இத்தகைய விளையாட்டுகள் மிகவும் ஆதரிக்கத்தக்கவைகள்.

குழந்தை தன் கூட்டாளிகளுடன் தின்பண்டங்களையும் விளையாட்டுப் பொருள்களையும் பகிர்ந்து அனுபவிக்கப் பழக்கி வரவேண்டும். இரப்பவர்க்கீதல், பசித்தவர்க் கன்னமிடுதல், துன்புறுவார்க் கிரங்குதல் முதலிய அறச்செய்கைகளில் இவ்வயதினின்றே குழந்தைகளைப் பழக்கிவரலாம். ஈத்துவக்கும் இன்பத்தைச் சிறுவர்களிடத்தில் வளரச்செய்வது சன்மார்க்க விருத்திக்கு இன்றியமையாததாகும்.

தான் எனும் விஷவித்திலிருந்து விளையும் கர்வமும் பொறாமையும் பரோபகாரத்திற்குப் பரம சத்துருக்களான துர்க்குணங்கள். இவைகளை இவ்வயதினின்றே களைந்துவரவேண்டும். பொறாமையை விளைவிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் நேராதபடியும் கவனித்துவரவேண்டும். அங்ஙனமே குழந்தையினிடத்தில் அதன் தோழனொருவனைக் காட்டி, “இதோ பார்! இவன் உன்னைவிட நல்லவன், இவன் உன்னிலும் சமர்த்தன்” என்பனவற்றைக் கூறுவது தவறு. ஏனெனில் இத்தகைய உவமானக் கூற்றுகள் குழந்தையின் மனதில் பொறாமையை விளைவிக்க ஏதுவாகின்றன.

பார்த்ததைப்போல் செய்தல் குழந்தைகளின் சுபாவமானதால் அவர்கள் மனதில் பரோபகார சிந்தை படிவதற்கு நற்குண நற்செய்கைகளுள்ள தோழர்களின் சகவாசமும் அவர்களுடைய நன்மாதிரியும் முக்கியமானவை.

சுருக்கிச் சொல்லவேண்டுமாயின் பரோபகாரப் பயிற்சி சன்மார்க்க போதனையின் பிரதம அம்சமென்பது எவராலும் மறுக்கப்படாத எதார்த்தமாகும். எங்ஙனமெனின், எவனொருவன் தான் எதுசெய்யத் தொடங்கினும் அச்செயலால் தனக்குக் கிடைக்கக்கூடிய இலாப நஷ்

டத்தை மாத்திரம் எண்ணாது அதனால் பிறர்க்கும் நேரிடக்கூடிய அநுகூலப் பிரதிகூலங்களைச் சீர் தூக்கிப் பார்த்து, பிறர் நலத்தையே முக்கியமாகப் பாராட்டி ஒழுகுவானோ அவனே நீதிநெறி வழுவாத உத்தமனாவன்.

(இன்னும் வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

ஷாஜிஹானும் தாஜ் மஹாலும்.

(தொடர்ச்சி.)

அதிரூப சௌந்தர்யவதியாகிய மம்தாஜ் மஹாலுக்கும் ஷாஜிகானுக்கும் கி. பி. 1612-ம் வருஷத்தில் வெகு பெருமையுடன் கலியாணம் நடந்தது. விவாக காலத்தில் மணமகனுக்கு வயது 20 வருஷம் 3 மாதம். மணமகளோ அவனுக்கு 14 மாதங்கள் இளையவள். விவாக கால முதல் இவர்கள் ஒருவரை யொருவர் ஒப்பற்ற அன்புடன் நேசித்திருந்தனர். மம்தாஜ் மஹால் தன் கணவனையே கடவுளாகக் கருதியிருந்தனள். அவன் வார்த்தைக்கு எக்காலும் மாறுசெய்தவள் அல்லள். அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பதுபோல் அவனது அகத்திலுள்ள அபீஷ்டங்களை முகக்குறிப்பாலறிந்து தக்கவாறு நடப்பாள். தன்னையன்றி மற்றொரு ஸ்திரீயை அவன் மனத்தில் கனவிலும் நினையா வண்ணம் அவனுக்குச் சகலவிதத்திலும் திருப்தி செய்விக்க முற்படுவதையே முதற் கடமையாகக் கொண்டிருந்தனள். இவ்வரிய அழகுபொருந்திய அணங்கின் கற்பு, அடக்க முதலிய நற்குணங்களைப் பார்த்தோர் பலரும் கொண்டாடினர். ஷாஜிகானும் உள்ளன்புகொண்டு இவளிஷ்டப்படி நடந்துவந்தான். இவர்களது இல்வாழ்க்கை ஒரு குறைவுமின்றி மிகக் களிப்புற்றிருந்தது. உடல் இரண்டும் உயிரொன்றுமாய் ஒருமனப்பட்டு மிக மேன்மையுடன் 19 வருஷகாலம் இணைபிரியாமல் வாழ்ந்திருந்தனர்.

அவள் பதினான்கு குழந்தைகளைப் பெற்றாள். அவற்றுள் இறந்ததுபோக இருந்தது டோரா, ஷுஜா, அவுரங்கசீப், மோராத் என்ற நான்கு ஆண்மக்களும் அஞ்சுமானாரா, கைதியாரா, ஜஹானாரா, டஹாராரா என்னும் நான்கு பெண்களுமேயாம். கடைசியிற் சொன்ன டஹாராரா அல்லது ரோஷன்ராய் என்னும் பெண்குழந்தையைக் கர்ப்பமாயிருந்து பிரஸவ வேதனைப்படும்பொழுது கர்ப்பத்திலிருக்கும் சிசுவின் அழுகைச்சத்தம் மம்தாஜ் மஹாலின் காதிற் கேட்டதாம். உடனே ராணி

தன் கணவனாகிய ஷாஜிகானை வரவழைத்து, "எனது உயிர்க்குயிரான ஒப்பற்ற பிரபுவே, இதுவரைக்கும் நாம் பேரன்புவாய்ந்த உயிர்த்தோழரா யிருந்தோம். ஒருவரை யொருவர் அரைக்கணமேனும் விட்டுப் பிரிந் திருந்ததில்லை. இப்போது எனது உலகவாழ்க்கை முடிவுபெறப் போவதுபோல் தோன்றுகிறது. நாம் பிரியுங்காலம் சமீபித்திருக்கிறது. கர்ப்பத்திலிருக்கும் குழந்தையின் அழுகைக்குரல் கேட்ட தாயானவள் பிழைத்திருப்பதில்லை எனப் பெரியோர் சொல்வது வழக்கம். அது போலவே, இப்போது என் வயிற்றிலிருக்கும் குழந்தையின் அழுகைச் சத்தம் எனக்குக் கேட்டது. ஆதலின் நான் பிழைத்திருப்பது சந்தேகம். யான் இவ்வுலகை விட்டகலுவது நிச்சயமே. யான் எனது கடைசிப் பிரயாணத்திற் செல்லுகின்றேனாதலின், அரசே! மனத்தாலும் வாக்கா லும் காயத்தாலும் செய்த என் பிழைகளைப் பொறுத்தருளுக. யான் உமது சுக துக்கத்தில் ஈடுபட்டிருந்தேன். இப்போது நீர் அரசாளவும் யான் துக்கத்தில் செல்லவும் கடவுள் விதித்தார்போலும்" என உரைக் கக்கேட்ட ஷாஜிகான் ஆருத்துயருடன் அலறி அழுதான். யான் உன்னை எவ்வாறு பிரிந்திருப்பேன் என்று அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாய், வருவது வந்தே தீரும், வழியிற் றங்காது. பகவனின் கட்டளையை மீற வல்லவர் யாவர் எனத் தேற்றிக்கொண்டு, "எனதன்பிற்குகந்த உயிர்த் தோழீ, உனது உள்ளத்திலுள்ள மனோபீஷ்டங்களையாகிலும் வெளி யிடின் அவற்றை நிறைவேற்றுவேன்" எனவும், அவள் "ராஜனே, பக வான் உமக்கு நான்கு பிள்ளைகளையும் நான்கு பெண்களையும் கொடுத் திருக்கின்றார். உமது பெயரையும் புகழையும் நிறுத்த அவர்களே போதும் எனினும், நான் இறந்த பிறகு நீங்கள் மறுவிவாகம் செய்துகொள் வீர்கள். அந்தத் தாரத்தின் வயிற்றில் பிறக்கும் குழந்தைகட்கும் என் வயிற்றில் பிறந்த குழந்தைகட்கும் ராஜ்ய விஷயமாய்ச் சச்சரவு நேராத படி செய்யவேண்டும். அதாவது மறுவிவாகம் செய்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென்பது எனது முதலாவது பிரார்த்தனை. யான் மரித்தபின் என்னை அடக்கஞ்செய்யுமிடத்தில் என் பெயர் உலகத்தில் எப்பொழுதும் மறக்காமலிருக்கும்படி ஓர் சிறந்த கோரி கட்டிவைக்க வேண்டுமென்பது எனது இரண்டாவது பிரார்த்தனை. எனது இவ் விரண்டு வேண்டுகோளையும் தவறாமல் நிறைவேற்றி வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றாள். அவ்விதமே சிறிதும் குறையின்றி நடத்துவதாய் ஷாஜிகான் வாக்களித்தான்.

பிறகு முப்பதுமணி நேரத்துக் கதிகமாக மிகக் கொடிய பிரஸவ வேதனைப்பட்டுப் பெண் குழந்தையைப் பெற்று அவள் சொன்னபடியே

சிலமணி நேரத்திற்கெல்லாம் கி. பி. 1631-ம் ஞு ஜூன் மீ 7-ம் உ செவ்வாய்க்கிழமை உயிர் துறந்தனள்.

ஷாஜிகான் குழந்தைபோல் கோவெனக் கதறினன், அழுதான், ஆர்த்தான். அவன் துக்கத்துக்கு அளவில்லை. ஒருவாரம் தன் படுக்கையை விட்டு எழுந்தவன் அல்லன். ராஜ்ய விவகாரத்தையாயினும் வேறெந்த விஷயத்தையாயினும் கவனித்தவனுமல்லன். "இராஜ்யத்தைக் கவனியாது அலக்ஷயஞ்செய்யின் பாபம் சம்பவிக்கும், இல்லை எனின் யான் பக்கிரியாய்ப் போய்விடுவேன்" என்றனன். பல நிறமுள்ள உடுப்புக்களையும் வாசனை வஸ்துக்களையும் நகைகளையும் உபயோகிப்பதை விட்டுவிட்டான். வருஷாந்தர முடிசூட்டுக்களிலும் பிறந்த நாட் கொண்டாட்டத்திலும் வாத்தியங்களையும் பாட்டுக்களையும் நிறுத்திவிட்டான். அவனது தாடி அதி துரிதத்தில் வெண்மையாக மாறியது. அவள் கல்லறைக்குச் சென்ற ஒவ்வொரு தடவையும் அவன் ஆறுகக் கண்ணீர் கொட்டி, "ராஜ்யத்தில் எனக்கு ருசியில்லை, உயிரிலேயும் ஒரு பிடிப்பு மில்லை" என்பான். இராஜ ஸ்திரீகளிருக்கும் அந்தப்புரத்துக்குப்போனல் "இப்போது ஒருவர் முகமும் எனக்குச் சந்தோஷம் உண்டுபண்ணவில்லையே" என்று சொல்லி அழுதுகொண்டு உடனே திரும்பிவிடுவான். மும்தாஜ் மஹால் அவன் இருதயத்திலேயே எப்போதும் முற்றும் குடிகொண்டிருந்தாள்.

அவள் பிரிவாற்றுமல் அழுகின்ற கணவனும் இவ்வாறு துக்கப்பட்டு அவள் சொல்லியபடியே நடந்தனன். அவன் வேறு பெண்ணை மணந்துகொள்ளவில்லை. கி. பி. 1632-ம் ஞு முதலிலேயே ஆக்ரா நகரத்தின் தெற்கில் 'தாஜ்' கட்ட ஆரம்பித்துவிட்டான். மேதாவிகளான சிற்பிகள் கொடுத்த பிளான்களில் ஒன்றை ஒத்துக்கொண்டு அதன் மாதிரி முதலில் மரத்தில் செய்துபார்த்து அதுபோலவே கோரியைக் கட்ட உத்தரவு கொடுத்தான். மக்ரமத்கான், மீர் அப்துல்கரீம் என்றவர்களின் மேல்விசாரணையில் அது கட்டிமுடிக்க 20 வருஷம் சென்றது. 50 லக்ஷம் ரூபாயும் பிடித்தது. 9 கோடியே 17 லக்ஷம் ரூபாய் பிடித்ததென்றும் ஓர் பழைய பாரஸீக கையெழுத்துப் பிரதி சொல்லுகிறது. அதைக் கட்ட வேலைக்காரர்கள் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். மாதம் 1000 ரூபாய் சம்பளம் பெற்ற பல இஞ்சினியர்கள் அதில் வேலைபார்த்தார்கள்.

உலகத்தில் இதைப்போல் அழகானதும் விலையேறப் பெற்றதுமான கட்டடம் வேறு எதுவுமில்லை. உலகத்தின் இவ்வற்புதத்தைப்பற்றி

விபரமாய்ப் பேசப்புகுவது வீண் பிரயாசையேயன்றி அதைச் சரியாய் வர்ணிப்பது சாத்தியமன்று. அதன் படத்தையாவது பாராதவர் இல்லை என்றே சொல்லலாம். சக்ரவர்த்தியினது துக்க சாகரத்தின் ஞாபக சின்னமாகிய இந்த அதிசய கோரி கட்டி முடிய 20 வருஷகாலம் பிரதி தினமும் இருபதினாயிரம் வேலைக்காரர்கள் சிரமப்பட்டார்கள் என்றால் இதன் பெருமையை வாசிப்போரே ஊகித்துணர்க. ஐரோப்பிய யாத்திரிகர்கள் எல்லாம் இதைப்பற்றி மிகுதியும் சிலாகித்துப் பேசியிருக்கிறார்கள். பனிபோன்ற வெண்மையான ஒரு பெரிய முத்தைச் சுற்றிலும் பல சிறிய முத்துக்கள் சூழ்ந்திருப்பதுபோல் மத்தியில் பெரிய விசித்திரமான வில் மண்டபமும் அதைச் சுற்றிலும் பல சிறிய வில் மண்டபங்களும் ஒரு கொத்தாய் நிற்கின்றன. அதன் நான்கு பக்கங்களும் ஒரே மாதிரியானவை. அது சித்திரித்த முழு வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டு உட்புறத்து இருபது வகையான விலையுயர்ந்த ரத்தினங்க ளிழைக்கப்பெற்றிருக்கின்றது. பேரழகு வாய்ந்த இக் கட்டடம் ஆக்ரா நகரத்தில் யமுனை யாற்றங்கரையில் இன்றைக்கும் நேற்றுத்தான் கட்டியதுபோல அவ்வளவு புத்தம்புதிதாய் ஜொலித்து நிற்கின்றது. அதன் கீழ்ப் பாரிசத்தில் சிறந்ததோர் தோட்டமிருக்கின்றது. கி. பி. 1643-ம் ஆு ஜனவரி மீ 27-ம் உ இதன் பாதுகாப்புக்காக வருஷம் இரண்டு லக்ஷம் ரூபாய் வருமானமுள்ள முப்பது கிராமங்களையும் விட்டான். ஷாஜிகான் கி. பி. 1666-ம் வருஷத்தில் இறந்துபோனான்.

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார்,
கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர், புதுவை.

இலக்கியப் பகுதி.

நூல் நயந்தெரித்தல்.

அமிழ்தினுமினிய செந்தமிழ்ச் செல்வர்காள்!

திருவாங்கூர் சமஸ்தானம் கோட்டாறு எனும் இந்நகரியில், எமது மூதாதையார் திராவிடப் புலமையிற் சிறந்த ஸ்ரீமத் நீலகண்டன் ஆசாரி அவர்கள் ஸ்ரீ கந்தபுராணத்தைப் பற்பல கீர்த்தனை ரூபமாக விருத்தங்களோடு கந்தநாடகமெனும் பெயரிய பெரிதாநூலும், எங்கள் பாரம்பரிய குடும்பதெய்வமாகிய செந்தில் முருகப்பிரான் பத்தி விசேடத்தால் அப்பெருமான் பேரில் சொல்லினிமை, பொருணயம், பத்திச் சுவை இவை

பெரிதும் நிரம்பிய பல்லாயிரக் கணக்கில் சந்த விருத்தங்களும் தனிக் கீர்த்தனைகளுந் திருவாய் மலர்ந்து பாடியுளர்.

பின்னர், எந்தையார் வித்வான் ஸ்ரீ கணபதி ஆசாரி அவர்களால் "சாணக்கிய சூத்திரம்" எனுங் காவியம் நூதனமா யியற்றப்பட்டுள்ளது. இதற்கு வடமொழியிலுள்ள முத்திரா ராக்ஷஸமென்னும் நாடகமே முதனூலாயினும், காவிய ஒழுங்கைக் கருதில், அதனின்றும் அநேக வேறுபாடுகள் ஆசிரியரவர்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இஃதோர் சிறந்த காப்பியம் எனக் காலஞ்சென்ற ராய் பகுதூர் ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்களானும், திருவனந்தபுரம் மகாராஜா அவர்கள் கலாசாலையில் பிரதம தமிழ்ப் பண்டிதராயிருந்த ஸ்ரீமான் சி. சாமிநாத தேசிகர் அவர்களானும், மற்றைய பிரபல பெரும் புலவர்களானும், செய்யுள் வகையானே நன்கு மதிக்கப்பட்ட தன்மையது. அன்றியும், திருச்செந்திற் றிருவிளையாடற் புராணம், கன்னியாகுமரிப் பகவதி அம்மன் பிள்ளைத் தமிழ் முதலிய பல சின்னூற்களும், வேதாந்த விஷயச் செறிவுள்ள விவேக ரஸக் கீர்த்தனைகளும், பரிமேலழக ருரையைத் தழுவிய திருக்குறள் நுட்ப வியாக்கியானமும், இலக்கண மேற்கோளெடுத்துக் காட்டிக் கம்பராமாயண வருங் கவித் தீபிகையும், பிரகிருத நூல், தருக்க நூல், மானத நூல் முதலியவற்றின் உண்மைத் தெளிவுகள் ஒருங்கே விளக்குவதாக வசன ரூபமாக "இருதய காஞ்சனம்" என்பதோர் நியாய நூலும், இன்னோரன்ன பன்னூற்களும் இவர்களா லியற்றப்பட்டுள்ளன.

மேற்கூறிப் போந்த பல பெரு நூற்களினும் சின்னூற்களினும் மிகச் சிறியதோர் கன்னியாகுமரிப் பிள்ளைத்தமிழ் ஒன்றே அச்சியற்றியுள்ளது. பிதா அவர்கள் காலஞ்சென் றைந்தாண்டே யாகின்றன. இவற்றை இங்குள்ள சில நண்பர்களும், தமிழ் வித்வான்களும், இவ்வருமைக் கலைமகள்பால் யாவரும் அறிவான் பிரசுரிக்கும் வண்ணம் அவாவுற்று வேண்டுவாராயினர்.

பல தமிழ் வித்வன் மணிகளால் ஆதரிக்கப்பெறும் கலைமகள் எனும் பத்திரிகைத் தலைவியே! நின்வயின் அமைந்துள்ள கல்வியுணர்ச்சியால் நின்னை அருமையோடு போற்றி வளர்த்துவருங் கனவான்கள்பால், நான் வரைந்துள்ள இவ்விபரங்களை அறிவி. இங்ஙனம் நீ எற்கு அளிக்கும் நன்றிக்குச் சிறியேன் சிறிதுங் கைம்மாறு உதவுந் தகுதியில்லேன் எனினும் அப்பல நூற்களில், சாணக்கிய சூத்திரம், திருச்செந்திற் றிருவிளையாடற் புராணம் முதலிய நூற்களிலுள்ள செய்யுட்களைச் சிறிது சிறிதாச் சந்தர்ப்பம் நோக்கி நின்மாட்டுதவ நினைவு கொண்டிண்டு வரைவான் புக்கனன்.

சாணக்கிய சூத்திரம்.

முதலாவது அனுக்கிரக காண்டம்.

சிறப்புப்பாயிரம்.

(விநாயகக் கடவுள்.)

உலக மாமலர்க் கோரிளஞ் சூரியன்
திலக மாமறைத் தெய்வ முகத்தினில்
இலகு மாபதி யீன்ற கயானனத்
தலகில் சோதி யடிபணிந் தேத்துவாம்.

(சிவபெருமான்

அழைத்தோங்குற் றியைமகனென் றூலுமந்தப் பெயருருவுக் கன்மையாகி, யிழைத்தோங்கு மாறெனவே சரவசரங் கலந்துநின்று னென்றுமென்ப, குழைத்தோங்கா ரத்திருந்த படியிருந்து விளங்கியின்பக் கோலங் காட்டித், தழைத்தோங்குஞ் சைவசிகா மணியொளியெவ் விடத்துமென் றுந் தயங்கு மன்னே.

(இதுவுமது.)

பிணங்குவதிங் கனிர்தசட துக்கமுமாய்ப் பெறுமாயை
குணங்களொரு மூன்றகலக் குவிந்தபர வெளியிடத்தே
அணங்குறழ்வெம் புலிபாம்பு மாமகந்தை வஞ்சமும்போய்
வணங்குவது மணிமன்று ணடித்ததிரு மலர்த்தாளே.

(திருச்செந்திற் றிருவிளையாடற் புராணம் கணபதி வணக்கம்.)

திருச்செந் திற்பெரு மான்புகழ் செப்புகேன்
கருச்செந் திற்கிட மாங்கலை யாதியாம்
உருச்சென் றெட்டொரு தூங்குகை யும்பறன்
மருச்செந் தாமரைப் பாதம் வணங்கியே.

(அருளிறை வணக்கம்.)

எந்த வத்துவிற் பதினைந்து கலைகளு மியலும்
எந்த வத்துவிற் பிரதிதே வர்களெலா மிருப்பார்
எந்த வத்துவி லைக்கியமாம் பதவியு மிணங்கும்
அந்த வத்துவாஞ் சற்குரு திருவடி யணைவாம்.

(அம்பலவாணன் வணக்கம்.)

எவனைம் பூதமோ டிருகதி ரணுவுமா யியல்வான்
எவன் பிடானந்தத் திருநடஞ் சிற்சபை யிடுவான்
எவன் சடாடவி தவழுமாற் கங்கையோ டிந்து
அவன லாதுவே றறிகிலே னென்னகத் தன்றே.

(இன்னும் வரும்.)

வித்வான், ஜி. சுவாமிநாதன் ஆசாரி,
கோட்டாறு.

சாத்திரப் பகுதி.

மங்கலம்.

(தொடர்ச்சி.)

வைராக்கியம் முதலிய நற்குணங்களுள் யாதை யடைய யாம் விரும்புகின்றோமோ அதனை நமதாசையானது வீணையின் றந்தியை எலி கெடுக்குமாறுபோற் கெடுக்கின்றது. நீர்ச் சுழிக்கணுற்ற திருணம் போலவும் காற்றிற் சுற்றுஞ் சருகுபோலவும் ககனத்திற் சாற்கால மேகம் போலவும் சிந்தை வடிவ சக்கரத்தின்கண் நாம் சுழலுகின்றோம். விகங் கங்கள் வலைக்கண் ணகப்பட் டுழல்வதேபோல ஆன்ம ஞானமடைதற் காற்றலற்ற நாம் சிந்தை வடிவ ஜாலத்தகப்பட் டரும் பெரு மோகமடைந் துழல்கின்றோம். ஆசையாந் தீயா லடப்பட்ட யாம் அமிருதத்தின்கண் ணழுந்தியபோதினும் தாப சாந்தியை யடையோம். அறிவில்லாதவ ரிடத்தே யனவரதம் வாசஞ்செய்வதும் சுவர்க்க நரகங்களிற் கமனா கமனங்களைச் செய்விப்பதும் மிகச் சஞ்சலமுற்றதும் அகங்காரக் கிரந்தி யுற்றதும் ஆகிய ஆசையானது ஏற்றத்தின் நுனியிற் கட்டிய கயிறொப்ப ஆடிக்கொண்டேயிருக்கும். நாசியிற் றாம்புகொண்ட எருதுபோல ஆகத் துள்ளமரும் மனத்தாற் கோக்கப்பட் டெவராலுஞ் சேதிக்கவியலாத ஆசையால் உயிர்கள் இகபர பயன்களை யீயும் அநேக சாதனச் சுமை களைச் சுமப்பர். வேட மங்கையரால் விகங்கங்கண்மீது வலை வீசப்பெறு வதேபோல நிரந்தரம் விடயங்களிடத்தே யழுத்து மியற்கைத்தாய ஆசை யாற் சீவர்கண்மீது புத்திர மித்திர களத்திராதி வடிவ வலை வீசப்பட்டே வருகின்றது. ஆசையானது அபர பக்கத் திர வொப்பத் தீரனையும் பய முறுத்துகின்றது, விவேக விழியுடையவனையும் அந்தகனாக்குகின்றது,

இன்புறுபவனையும் துன்புறுமாறு செய்விக்கின்றது. மிகக் கோணியதும் விடய மடைவுற்றபோ தற்ப சுகத்தை யடைவிப்பதும், முடிவில் விடமொப்ப வயிரம் பந்தம் கொலை முதலியவற்றைத் தடையின்றித் தாராளமாய்த் தருவதும் ஆகிய ஆசையானது சருநாகம்போலச் சிறிது தீண்டினும் மோகத்தையே யுண்டாக்குகின்றது (கோணல் – சூது வஞ்சனையென்ப) மாயை நோய் இலம்பாடு எளிமை முதலியவற்றை யீயும் ஆசையானது நீல மலை நிகர்த்த இராக்ஷசிபோலப் புருடரின் இருதயத்தைப் பிளக்கின்றது. விழைவானது எஞ்ஞான்றும் மகாபாவத்திற் கேதுவாகியும் முடிவிலாத் துயரீயும் சித்தமயலை விளைவிப்பதாயும் மிகுதியாய முயல்வை யுடையதாயும் அதி நட்பை யுடையதாயு மமரா நிற்கும்.

(இன்னும் வரும்.)

வீர. சு.

பெருமையுஞ் சிறுமையுந் தான்றர வருமே.

(இதில் ஓர் உண்மை)

இவ்வியனுலகில், இவ்விஷயம் பெரிதென்றும், இவ்விஷயம் சிறிதென்றும், இவ்விஷயம் அற்பமானதென்றும், இவ்விஷயம் மகா மாட்சிமை தங்கியதென்றும் வரையறுப்பதற்கு யாவரேனும் முயலின், அன்னோரின் தன்மை மிகப் பரிதாபகரமானதே எனெனில் இவ்வுலகம் சத்தியமாகில் அதிலுள்ள பொருள்களும் மற்ற விஷயங்களும் ஸத்தெனலாம். ஆனால் உலகமோ சுத்தியில் வெள்ளியின் பிரமம்போல் மித்தையாகத் தோன்றிக்கொண்டிருக்கின்றது. அங்ஙனமிருக்க அதனுடன் அடங்கிய ஸகல விஷயங்களும் எங்ஙனம் ஸத்தியமாதல் கூடும்? மேலும் இவ்வுண்மையை உலக நடவடிக்கைகளிலும் சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய இம்மூன்றனும் காணலாம்.

ஒருவன் தனக்கு ஒருகாலத்தில் கஷ்டமான விஷயமொன்றை மறுகாலத்தில் வெகு சுலபமாகச் செய்து முடிக்கிறான். அல்லது ஒரு காலத்தில் செய்துமுடிக்கக்கூடிய விஷயத்தைச் சிலகாலத்திற்குப் பிறகு செய்து முடிக்கச் சக்தியின்றி விழிக்கிறான். ஒருவனுக்கு மிகுந்த கஷ்டமாயுள்ள ஒரு விஷயம் மற்றவனுக்கு வெகு சுலபமாயுள்ளது. ஒருவனுக்கு அருவருப்பும் துக்கமும் தரக்கூடிய விஷயமொன்றை வேறொருவன் மிகத் தூய்மையாயும் சுகமாயுமுள்ளதாகக் கொண்டு மகிழ்வான். ஒருவனுக்கு யாதொரு பயனுமில்லாததாகக் காணப்படும் ஒரு

பொருள், ஒருவனுக்கு மிகுந்த அத்தியாவசியகமாயும் ஜீவாதாரமுள்ள தாயும் நேரும். ஒருவனுக்கு ஒரு சமயம் அறிதற்கரிய அரும் பெரும் விஷயங்களை மறு சமயம் கரதலாமலகம்போற் காண்கிறான். அவ்வாறே ஓர் சமயத்தில் மிகத் தெளிவாய்க் காணப்பட்டன அனைத்தும் மற்றோர் சமயத்தில் அவ்வியக்தத்தில் ஒடி ஒளிக்கின்றன. மேலும் ஒரு மனிதனைப் பெரிய மஹானென்றும் ஞானியென்றும் மிகுந்த யோக்கியனென்றும் மதித்துப் பூஜிக்கின்றோம். மறு நிமிஷத்தில் அவன் நம்மால் நிந்திக்கப்பட்ட கொடும்பாபியாயும் அயோக்கியனுயும் மாறிவிடுகிறான்.

இவ்விஷயங்களில் முன் முன் கொண்ட அபிப்பிராயங்கள் வாஸ்தவமா, அல்லது பின் பின் கண்ட அனுபவங்கள் சத்தியமா? முற்பக்ஷத்தை அங்கீகரிக்கிற் பிற்பக்ஷம் நிகழல் பிராந்தியாகும். பிற்பக்ஷத்தை அங்கீகரிக்கில் முற்பக்ஷம் கேவலம் பிராந்தியாகும்.

ஆனுல், அறிஞர் இருபக்ஷத்தையும் பிராந்தி ரூபமாகவே கொண்டுளார். எங்ஙனமெனின், "ஈண்டு நானுவென்பது சிறிதுமில்லை" என்ற சுருதிப்படி, சேதனத்திற்கு அன்னியமான விஷயம் யாதொன்றுமில்லையெனவும், அச்சேதனம் ஒருகாலத்தில் பெரிதாயும் மறுகாலத்தில் சிறிதாயும், ஒருகாலத்தில் நன்மையாயும் மறுகாலத்தில் தீமையாயும், ஒருகாலத்தில் முக்கியமாயும் மறுகாலத்தில் அமுக்கியமாயும், ஓர்கால் சுகமாயும் மறுகால் துக்கமாயும் இருப்பதில்லையெனவும், ஒருகாலத்தில் விளங்காமல் மறுகாலத்தில் விளங்குவதல்லவெனவும், ஓர் சமயம் யோக்கியதையும் மறுசமயம் அயோக்கியதையும் உடையதன்றெனவும், அச்சேதனம் நேற்றைவரையிலு மிருந்தது, இன்றைக்கு மிருக்கின்றது, நாளைக்கு மிருக்கின்றது எனவும், அது தேசகால வஸ்துக்களால் அந்தமில்லாத (வியாபக) தன்மையுடையதென்றும், ஸதா சுக ஸ்வரூபமென்றும், அதன் ஸத்துத்தன்மையும் சுகத்தன்மையும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் விளங்கிக்கொண்டிருக்கின்றதெனவும், பெருத்தல், சிறுத்தல், மாறுதல் முதலியவைகளில்லாத நிர்விகாரியென்றும் அறிந்திருக்கின்றனர். ஆகையால் அச்சேதனத்திற்கு அன்னியமாகத் தோன்றும் ஸகல திருசியாதிருசிய பிரபஞ்சமும் நம்மாற் கற்பிக்கப்பட்டவையே யன்றி அணுவளவும் ஸத்தியமல்ல. அப்படியிருக்க அதைக் கண்டு முன் சொன்னவாறு பிரமித்துத் துன்புறுவது எதை யொக்குமெனின், சென்ற அல்லாபண்டிகையன்று எல்லாரையும்போல் தானும் புலிவேஷம் போட்டுக்கொண்டு ஆடி மகிழ உத்தேசித்த ஓர் சிறுவன் மற்றொருவனை அடுத்துத் தனக்குச் செவ்வனே வேஷம்போட வேண்டுமென்று கோரினுன். அப்படியே அவனும் சம்மதித்து உண்மைப்புலி எவ்விதம் காணப்

படுமோ அவ்விதமாகவே அச்சிறுவனை மாற்றிவிட்டான். அவ்வேஷத்துடன் தெருவில் வரும்வரையில் அவனுக்குத் தான் இன்னானென்றும் தன் விருப்பத்தினாலே தனக்கு அவ்வேஷம் கிடைத்ததென்றும் எண்ணமிருந்தது. ஆனால் உடனே அவ்வெண்ணம் நீங்கிவிட்டது. தெருவில் வந்து நின்றதும் எல்லாரும் புலி வந்துவிட்டது என்று பயந்து ஓடத் தொடங்கினார்கள். நம் சிறுவன் தன் உருவத்தைச் சற்றுநேரம் உற்று நோக்கினான். தக்ஷணமே தன் வேஷத்தை வேஷமென்றறியாமல் தன்னை ஒரு புலி பற்றியிருப்பதாக மதித்து வெருண்டு ஜனங்களின் உதவியை நாடி ஓடினான். ஆனால் ஒருவரும் இவனை நெருங்கவில்லை. பின்பு தான் ஆதரவற்றவனாகவும், தீனனாகவும் நினைத்துக்கொண்டு, ஓ! என்றலறினான், புரண்டான். மீண்டும் தன்னை நோக்கினான். புலி தான் கண்ணிற்றோன்றியது. கண்களை மூடிக்கொண்டான். தன்னை இவ்வாபத்தினின்றும் நீக்கும்படி பலரையும் வேண்டினான்.

இங்ஙனமிருக்க, இவ்வனர்த்தத்தின் உண்மையும், அதை நீக்கும் உபாயமும், அச்சிறுவனிடம் அத்யந்த கருணையுமுடைய ஓர் புருடன் அங்கே தோன்றி, "குழந்தாய்! உன்னைப்பற்றியிருக்கும் இப்புலியினின்றும் உன்னைத் தப்புவிக்கும் உபாயம் கூறுவேன். அதன்படி நட" என்று ஆஞ்ஞாபிக்க, உடனே அச்சிறுவன் எழுந்து நமஸ்கரித்து, "என்னை ரக்ஷிக்கவந்த தெய்வமே! தங்கள் திருவாக்குக்கு மறுவாக்குமுண்டோ. தங்கள் சொல்லுக்கு அணுவேனும் பிசகாமல் நடப்பேன்" என வாக்களித்து அவரை நம்பிப் பின்சென்றான். சிறிது நேரத்தில் இருவரும் ஓர் குளத்தண்டை சேர்ந்தனர். பின்பு, அப்புருடன், "குழந்தாய்! இக்குளத்தில் இறங்கி மூழ்கிச் சிறிதுநேரம் கழுத்தளவு தண்ணீரில் நிற்பாயாகில் புலி தண்ணீரைக் கண்டு பயந்து ஓடிவிடும். பின்பு நீ சுகமாக வீடடையலாம்" என்று கூற, அதன்படியே குளத்தில் மூழ்கிச் சற்றுநேரமிருந்தான். அவனைப்பற்றியிருந்த வேஷமும் கரைந்தது. புலியும் மறைந்தது. கரையேறினான். தன் சொரூபமே மிஞ்சியது. சிறுவனும் ஆனந்தமடைந்தான். அவ்வாப்தனைக் கொண்டாடினான். பூஜித்தான். வீடடைந்தான்.

இவ்விதமாகவே சுக துக்கங்களை நாமே வீணில் ஆரோபித்துக் கொள்வதுமன்றி அதைக் கண்டே அதன் மித்யாத்வத்தை மறந்து ஸத்யமாக மதித்து மருளுகின்றோம். அந்தோ!! இச்சிறுவன் உதாரணத்தில் புலப்படும் பேதைமையை நோக்கின் நகைப்பும் பரிதாபமும் உண்டாகின்றதே. அங்ஙனமிருக்க அதைவிடப் பேதைமையான நாம் நம் பிரபஞ்ச

வியவகாரங்களில் எவ்வளவு பிரமத்தையும் துக்கத்தையும் அடைகின்றோம். அறிவிற் சிறந்த முக்தர்களின் நகைப்பு இப்பேதைமையை நோக்கியே யன்றோ!!!

ஆதலின் ஒவ்வொரு விவேகியும் எப்படிச் சொப்பனத்தில் காணக்கூடிய விஷயங்களில் எது மேன்மை, எது தாழ்மை, எது மெய், எது பொய், எது நன்மை, எது தீமை, எது முக்கியம், எது அமுக்கியம் என்று ஆராயாமல் யாவற்றையும் சமமான மித்தையாக மதிப்பனோ அம்மாதிரியே இப்பிரபஞ்ச வாழ்க்கையில் நேரக்கூடிய சகல விஷயங்களின் சிறுமையும் பெருமையும் தன்னால் கற்பிக்கப்படுவதேயென்ற நிச்சய புத்தியுடன் ஸகலத்தையும் ஸமமாகப் பார்த்துச் சிலவற்றில் அற்பமென்று அலக்ஷியமும் சிலவற்றில் பெரிதென்னும் பிரமமும் அடையாமல் ஸதா ஸமாதானத்தை யடைவன்.

M. V. சுப்ரமண்ய ஐயர்.

சுஜன சம்வாதம்.

விவேகி யார்?

உபோற்காதம்.

(தொடர்ச்சி.)

பிறகு அவர் இதை யார் நமக் கனுப்பியிருக்கக்கூடுமென விலாசத்தைக் கவனித்தார். அதில் தமது விலாச மெழுதியிருப்பதோடு,

அனுப்புதல்
சச்சிதானந்தன்
பிரமதேசம்
சிவஞானம் போஸ்டு
Via (மார்க்கம்) குருகுலம்.

என்று எழுதப்பட்டிருந்தது. இதைப் பார்த்தார் பிரபு. சச்சிதானந்தன் தனது பழமையான உயிர்த்தோழன் என்ப தவருடைய நினைவிற்கு வந்தது. அன்றியும் அவன் மிக்க ஊகமுள்ளவனென்பதும், பரோபகாரியென்பதும், எப்போதும் இனிமையாயும் நல்ல பயனைத் தரக்கூடியதாயுமுள்ள பேச்சுகளையே பேசுபவனென்பதும் அவருடைய ஞாபகத்துக்கு வந்தது. இதன்றியும் அவன் தன்னுடைய சகபாடியாகையால் ஸ்கூ

னுக்கு வரும்போதெல்லாம் தமக்கு நல்ல நல்ல பக்ஷணங்களைக் கொண்டு வந்து கொடுத்ததும் அவருடைய ஞாபகத்திற்கு வந்துவிட்டது. ஆ! ஆ!! பிரபு மிகுந்த ஆனந்தத்தை யடைந்துவிட்டார். அச் சிநேகிதனை யொருதரம் கண்டு வார்த்தையாடவேண்டுமென்னும் ஆசை யவருக்குள் பொங்கியது. இப்படிப்பட்ட நிலைமையில் புக்போஸ்டைப் பிரித்துப் பார்த்தார். அது திருவள்ளுவர் திருக்குறள். அதை யுடனே திறந்தார். ஆ! அவரது பல பிறப்புகளில் செய்த புண்ணியங்கள் திரண்டு அப் போதே பயனைத்தர ஆரம்பித்துவிட்டது. எங்ஙனம்! எங்ஙனம்! இத்தனை விரைவில் இத்தகாச் செய்கையாளர்க்கு என்ன விசேஷ பலன் பிராப்த மாயிற்று? கேளுங்கள்.

அவர் அத்திருக்குறள் புத்தகத்தைத் திறந்தபக்கத்தில் ஒரு துண்டுக்கடிதம் வைக்கப்பட்டிருந்தது. அதில் "அன்ப, இப் பக்கத்திலுள்ள "இருவேறுலகத்தியற்கை" என்னும் தலைப்பினையுடைய குறட்பாவைக் கவனிப்பாயாக" என்று எழுதப்பட்டிருந்தது. பிரபு அப்படியே அக் குறட்பாவைத் திருப்பித்திருப்பி வாசித்துப் பார்த்தார். அதன் கருத் தொன்றும் அவருக்குப் புலப்படவில்லை; ஆகையா லதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற இச்சை ஜனித்தது. அவ் விச்சையா லவருக்கு வேறொரு பிரவர்த்தியு முண்டாகவில்லை. ஆகலின் அதன் பொருளை விளக்கிவைக்கச் சச்சிதாநந்தனையே தருவிக்கவேண்டுமெனச் சங்கல்பித்தார். உடனே அச்சங்கல்பம் பலப்பட்டது. மசிக்கூடு, எழுதுகோல், கடிதம் இவைகள் வைக்கப்பட்டிருந்தவிடத்தில் போய், சச்சிதாநந்தனைத் தனது விருப்பத்தைத் தணிவிக்க வரும்படி பிரார்த்தனாரூபமாக ஒரு கடித மெழுதிப் போஸ்டு மூலமா யனுப்பிவிட்டார். அக்கடிதம் சச்சிதாநந்தனுக்குத் தவறாமல் போய்ச் சேர்ந்ததும், பரோபகாரியான அந்நண்பன் தன் சிநேகிதனது தீவிரதா விருப்பத்தை யுணர்ந்து மகிழ்ந்து, இனித் தாமதிப்பது கூடாதென உடனே புறப்பட்டுப் பிரபுவை வந்து கண்டதும், பிரபு அவ்வாப்த சிகாமணியின் வரவை மிக்க கௌரவப்படுத்தினர். பிறகு இருவரும் ஒரு ஏகாந்த ஸ்தானத்திலிருந்து வார்த்தையாடத் தொடங்கினர்.

(இன்னும் வரும்.)

ஆ. செங்கல்வராயமுதலியார்,
காஞ்சீபுரம்.

வைத்தியக் குறிப்பு.

கிராணி அதிசாரக் கழிச்சல்: — இந்நோய் கொண்டோர் மஞ்சள் கிழங்கைப் பொடித்து வடிகட்டிய தூளை வெருகடியெடுத்து ½ வீசம்படி வெந்நீரில் கலந்து ஆறவைத்து இதுபோல் மூன்றுநாள் ஆறுவேளை சாப்பிட்டுவர மலங்கட்டிச் சுகந்தரும்.

இன்னு மொருவிதம்: — சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், கொத்தமல்லி, சீரகம், ஜாதிக்காய், வகைக்குப் பலம் 1, இவைகளைத் தனித்தனி பசுவின் நெய்விட்டுப் பொன்னிறமாக வறுத்துச் சூரணித்து வடிகட்டி வைத்துக்கொண்டு 2 பலம் பனைவெல்லத்தை வெள்ளாட்டுப் பாலிற் கரைத்துப் பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைத் தூவிப் போதுமான தேன் நெய்விட்டு லேகியம்போற் கிளறியெடுத்துப் பரணியில் வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்களவு வீதம் காலையும் மாலையும் சாப்பிட்டுவரத் தீரும்.

பின்னு மொருவிதம்: — துண்டித்த சுக்குப் பலம் ½ மேற்றோல் போக்கித் துண்டித்த இஞ்சி பலம் ½ ஓமம் பலம் ½ ஜாதிக்காய் பலம் ¼ இவைகளைத் தனித்தனி பசுவின் நெய்விட்டுப் பொன்னிறமாக வறுத்து இவைகளை அம்மியில் வைத்து அரைத்துத் தூளாக்கி அதிலுள்ள மயிர்க்கால்போன்ற நரம்பு முதலான குச்சிகளைப்போக்கி அதற்குச் சரியெடை பனைவெல்லத்தைச் சேர்த்து அரைத்துக் கொட்டைப்பாக்களவு உண்டை செய்து வைத்துக்கொண்டு காலை மாலை சாப்பிட்டுவரத் தீரும். மேற்கண்ட ஔஷதங்களைப் பிரயோகிக்கும் காலங்களில் வாய்வுப் பதார்த்தங்களை அருந்தக்கூடாது. எண்ணெய்தேய்த்து ஸ்நானம்பண்ணுங் காலங்களில் மருந்துகள் சாப்பிடக்கூடாது.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.
EX. முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

பத்திரிகை வரவு.

விச்சுவ கர்மன்.

இது யாழ்ப்பாணத்தில் மாத மிருமுறை பிரசுரமாகும் ஓர் தமிழ்ப் பத்திரிகை. இதில் பொதுநன்மையைக் கோரிய விஷயங்கள் பல காணப்படுகின்றன. இதன் பத்திராதிபர் ஸ்ரீமான் மு. அருணாசல ஆச்சாரியார். வருஷ சந்தா ரூபா 2–50 சதம். இதை அனுப்பினவருக்கு நமது நன்றியை யனுப்புகின்றோம்.

சமாசாரம்.

புரோபஸர் ராமமூர்த்திக்கு நேர்ந்த நஷ்டம்.

சென்ற மாதம் 25 ம் வ புரோபஸர் ராமமூர்த்தியின் ஸர்க்கஸ் சாமான்களடங்கிய டிரக்வண்டி ஈஸ்ட் இந்தியன் ரயில்வேயிலுள்ள கிரிதிக்கும் அஸன்ஸாலுக்கும் மத்தியில் தீப்பிடித்துக்கொண்டது. அதனால் அதிலிருந்த பதினாயிர ரூபாய் பெறுமான சாமான்கள் தீக்கிரையாயின. நெருப்புப் பற்றியதன் காரணம் இன்னதென்று தெரியவில்லை. சாமான்களில்லாமையால் சர்க்கஸ் நடத்த மார்க்கமின்றி அவர் கூட்டத்தார் அனைவரும் சென்ற இரண்டு வாரகாலமாக வேலையின்றி யிருக்கின்றனர்.

இடியால் நேர்ந்த கொடுமைகள்.

பண்ணுருட்டியில் இம் மாதம் 2-ம் வ சாயங்காலம் 3 மணிக்கு காற்று மழையும் இடியும் பலமாகவிருந்தன. குசப்பாளையத்திலிருந்து பண்ணுருட்டிக்கு வந்த வண்டிக்காரன் ஒருவன் ஒரு ஜவுளிக்கடையில் அந்த மழைக்காக ஒதுங்கியிருந்தான். அவன் இடிவிழுந்ததைப் பார்த்து உடனே இறந்துவிட்டான். அந்த ஜவுளிக்கடையில் இருந்தவர்களுள் ஒருவனுக்கு அந்த இடியைப் பார்த்ததும் ஒரு கண் போய்விட்டது. மற்றொருவனுக்கு ஒரு கை விழுந்துவிட்டது. அந்த ஜவுளிக்கடைக்காரனது தேகத்தில் எரிச்சல் கண்டது. அதே மழையில் பண்ணுருட்டிக்கடுத்த தட்டான்சாவடியில் ஒருவன் வண்டியில் ஒதுங்கியிருந்தான். காற்று மிகுதியால் ஒருமரம் விழுந்ததனால் அவன் மூளை சிதறிவிட்டது அவன் உடனே இறந்துவிட்டான். அதே மழையில் விரிஞ்சிப்பாக்கம் ஸ்டேஷனுக்கடுத்த அரைமயில் தூரத்தில் கட்டமுத்துப்பாளையத்தில் 3 பேர் ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்தார்கள். இந்த மழையில் 3 பேரும் ஒருபக்கத்தில் ஒதுங்கியிருந்தார்கள். அவர்கள் பேரில் இடி விழுந்ததினால் அம்மூவரும் இறந்துவிட்டார்கள். இதுபோல் இடியை எப்பொழுதும் பார்த்தது கிடையாதாம். இந்த மழையும் இடியும் காற்றும் 1¼ மணி நேரம்வரை இருந்தனவாம்

சென்னையில் கம்பியில்லாத் தந்தி ஆபீஸ்.

சென்னையில் கோட்டையை யடுத்துள்ள மைதானத்தில் கம்பியில்லாத் தந்தியை ஏற்படுத்துதற் பொருட்டு உயரமான கம்பங்கள் நாட்டப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இங்கு ஸ்தாபிக்கப்படும் கம்பியில்லாத் தந்தி சுமார் 500 மைல் தூரம் சமாசாரத்தைத் தெரிவிக்கக்கூடியதாமென்று தெரிகின்றது.